FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2022 டிசம்பர்

Vol. 02 - தொகுதி 12



கல்வெவ தேரருக்கு பிணை



டிலான் சேனாநாயக்க மீது தாக்குதல்.



மருத்துவர் சமல் சஞ்சீவவின் அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு.

ஊடக சுதந்திரம் குறித்து டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் , சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் டிசம்பர் 2022 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 07 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 05 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் என்ற தலைப்பில் ஒரு சம்பவம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் என மொத்தம் 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன.

## டிசம்பர் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. கல்வெவ சிறிதம்ம தேரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை.
2. வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோருக்கு கடுவெல நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டமை.
3. சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த மண்டபத்தை வழங்க BMICH அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தமை.
4. காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதலுக்கு எதிரான 5 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் தீர்மானித்தமை.
5. மருத்துவர் சமல் சஞ்சீவவின் பணி இடைநிறுத்தம் குறித்து ஆராய்வதற்காகப் பாராளுமன்ற பொது மனுக்கள்பற்றிய குழுவொன்றை நியமித்தமை.
6. வசந்த முதலிகே கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை.
7. ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்காக பணி இடைநிறுத்தப்பட்ட மருத்துவர் சமல் சஞ்சீவவின் அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்தமை.

8. இனந்தெரியாத நபர்களின் தாக்குதலில் சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனாநாயக்க பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

9. காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரான மனோஜ் முதலிகே குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

10. ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டமை.

11. சமூக ஊடக செயற்பாட்டாளரான சஷிக திஸாநாயக்க, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

12. ஊடகவியலாளர் சம்பசிவம் சதீஷ்குமாரை அச்சுறுத்தி அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை.

13. லேக்ஹவுஸ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் 149 பேர் இராஜினாமா.

14. 2022 மக்கள் எழுச்சியின்போது மனித உரிமை மீறல்கள்குறித்து Right to life அமைப்பு நடத்திய ஆய்வின் அறிக்கையை வெளியிட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 டிசம்பர் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 07 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 05 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 01 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| **மொத்தம்** | **14** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 07 சம்பவங்கள் டிசம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 டிசம்பர் மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 07**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 01 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| **மொத்தம்** | **07** |

1. **சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த மண்டபத்தை வழங்க BMICH அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தமை.**

டிசெம்பர் 10 ஆம் திகதி வெகுஜன அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம ஆகியோர் பிரதான பேச்சாளர்களாகப் பங்குபற்றவிருந்தனர். அனைத்து கட்டணங்களையும் செலுத்திய பிறகு, முன்பதிவு செய்யப்பட்ட மண்டபத்தை வழங்குவதில்லை என்ற முடிவுகுறித்து டிசம்பர் 8 ஆம் திகதி ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இந்த நிகழ்வு இலங்கை மன்றத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. “அரச அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் மக்களின் உரிமை“ அங்கு வலியுறுத்தப்பட்டது.

ஆதாரம்: 1. https://www.facebook.com/uduwaragedara
2. https://twitter.com/JDSLanka

2. **மருத்துவர் சமல் சஞ்சீவவின் பணி இடைநிறுத்தம் குறித்து ஆராய்வதற்காகப் பாராளுமன்ற பொது மனுக்கள்பற்றிய குழுவொன்றை நியமித்தமை.**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் போசாக்கு குறைபாடுகள் மற்றும் சுகாதார அமைச்சின் குறைபாடுகள் மற்றும் சுகாதார கொள்கைகளின் குறைபாடுகள் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கைகளினால் சுகாதார அமைச்சின் பெயரிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி வைத்தியர் சமல் சஞ்சீவ இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் பணி தடை தொடர்பாகச் பொது மனுக் குழுவை நியமித்து விசாரணை நடத்த இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

ஆதாரம்: https://wedabima.lk/union-news

3. **இனந்தெரியாத நபர்களின் தாக்குதலில் சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனாநாயக்க பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.**

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பலத்த காயமடைந்த அவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கடந்த 14ஆம் திகதி நுகேகொடை பாகொட வீதியில் உள்ள அவரது தனியார் கலையகத்திற்கு (ஸ்டுடியோவிற்கு) வந்த முகமூடி அணிந்த இருவர் அவரைத் தாக்கியுள்ளனர். குற்றவாளிகளை அடையாளம் காண்பதில் போலீசார் தோல்வி அடைந்துள்ளனர். குரல் கலைஞரான டிலான் சேனாநாயக்க, காலிமுகத்திடல் போராட்டத்தில் முன்னணி செயற்பாட்டாளர் ஆவார்.

ஆதாரம்: https://www.youtube.com

4. **காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரான மனோஜ் முதலிகே குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

டிசம்பர் 15ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அவரிடம் சுமார் 5 மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளனர். அலரி மாளிகை கைப்பற்றப்படுதல் உள்ளிட்ட போராட்ட நடவடிக்கைகளுக்கு வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோருக்கு தலைமைத்துவம் காணப்பட்டதா எனத் தன்னிடம் கேள்வி எழுப்பப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஆதாரம்: https://www.youtube.com

5. **ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டமை.**

வடமாகாண ஊடகவியலாளரான கணபதிப்பிள்ளை குமணன் கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி முல்லைத்தீவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக ஒரு சந்தர்ப்பத்தில், ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

ஆதாரம்: FMM-MFRM Desk

6. **சமூக ஊடக செயற்பாட்டாளரான சஷிக திஸாநாயக்க, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

டிசம்பர் 20ஆம் திகதி குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட அவர், காலிமுகத்திடல் போராட்டத்திற்கும் சிரச ஊடகத்துக்கும் தொடர்பு உள்ளதா எனத் தொடர்ந்து கேள்வி எழுப்பியதாக குறிப்பிட்டார். மேலும் கூறுகையில், "இந்தக் கேள்விக்குப் பின்னால் அந்த ஊடக நிறுவனத்தை முடக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது." எனக் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

ஆதாரம்: https://www.youtube.com

7. **ஊடகவியலாளர் சம்பசிவம் சதீஷ்குமாரை அச்சுறுத்தி அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை.**

தோட்ட வீடுகளில் வசிப்பவர்களுக்கு நீர் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட அமைதியின்மையை அறிக்கையிட்டுக் கொண்டிருந்தபோது மடோல்சிம பெருந்தோட்ட கம்பனிகளுக்கு உரித்தான பொகவந்தலாவ கெர்கஸ்வோல்ட் தோட்ட முகாமைத்துவம் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ின் தோட்ட தலைவர் ஆகியோரால் குறித்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் டிசம்பர் 30 ஆம் திகதி குறித்த ஊடகவியலாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆதாரம்: FMM-MFRM Desk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**டிசம்பட் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 05 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. இதில் 04 நிகழ்வுகள் முந்தைய நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்குகள் ஆகும்.**

**அட்டவணை 03 – 2022 டிசம்பர்: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 05 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 05 |
| **மொத்தம்** | **05** |

1. **கல்வெவ சிறிதம்ம தேரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புவனேக அலுவிஹாரே மற்றும் ஜனத்த சில்வா ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனை செய்யப்பட்டு எதிர்வரும் ஜனவரி 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: https://www.youtube.com

2. **வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோருக்கு கடுவெல நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டமை.**

ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் மற்றும் அனைத்து பல்கலைகழக பிக்கு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர்களான வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோர் டிசம்பர் 6 ஆம் திகதி கடுவெல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இங்குக் கல்வெவ சிறிதம்ம தேரர் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வசந்த முதலிகே, மற்றுமொரு வழக்கு தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் மேலும் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆதாரம்: www.ada.lk

3. **காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதலுக்கு எதிரான 5 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் தீர்மானித்தமை.**

09 மே 2022 அன்று காலிமுகத்திடல் மைதானத்தில் முகாமிட்டிருந்த செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக, பலத்த காயமடைந்த லஹிரு சானக உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் குழுவினால் இந்த மனுக்கள் முன்வைக்கப்பட்டன. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனுமீதான விசாரணை ஜுன் 22ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

ஆதாரம்: https://www.youtube.com

4. **வசந்த முதலிகே கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, டிசம்பர் 12ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் தரங்க மஹவத்த முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அறுபது வீதமானவை நிறைவடைந்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படும் எனவும் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்தார். குறித்த சந்தேக நபரிடமிருந்து சுமார் 8-9 வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் மேலும் 1150 பேரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், இதுவரை நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ள விசாரணை அறிக்கைகளின் பிரகாரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றமும் கண்டறியப்படவில்லையெனச் சுட்டிக்காட்டியதுடன் பொது சட்டத்தின் கீழ் தீர்மானம் மேற்கொள்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் காணப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபர் மறுநாள் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஜனவரி 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: https://www.youtube.com

5. **ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்காக பணி இடைநிறுத்தப்பட்ட மருத்துவர் சமல் சஞ்சீவவின் அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்தமை.**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் குழந்தைகளின் போசாக்கின்மை தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையினால் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள வைத்தியர் சமல் சஞ்சீவவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிக்க டிசம்பர் 14ஆம் திகதி உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இங்கு பணி இடைநிறுத்தத்தை இரத்து செய்ய வேண்டி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க மனுவில் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

ஆதாரம்: https://island.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் டிசம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டது**

**அட்டவணை 04 – 2022 டிசம்பர் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **2022 மக்கள் எழுச்சியின்போது மனித உரிமை மீறல்கள்குறித்து** Right to life **அமைப்பு நடத்திய ஆய்வின் அறிக்கையை வெளியிட்டமை.**

ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு, கோட்டாகோகம தாக்குதல், மே 9ஆம் திகதி மாலை இடம்பெற்ற தொடர் பழிவாங்கும் தாக்குதல்கள் ஆய்வின் அடிப்படையாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேற்படி சம்பவங்களைத் தடுப்பதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்தல், சுயாதீன ஆணைக்குழுக்கள் மூலம் விசாரணைகளை நடத்துதல் மற்றும் அனைத்து விசாரணைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்கள் மற்றும் குறைப்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கு ஆணைக்குழு போன்ற பொறிமுறையை நிறுவுதல் போன்ற பரிந்துரைகளில் இங்கு அடங்குகின்றன. இந்த அறிக்கை டிசம்பர் 30ஆம் திகதி கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டது.

குறித்த அறிக்கையின் இணைப்பு: https://www.right2lifelanka.org/publications

## தொழில்சார் நிபுணத்துவம்

**'தொழில்சார் நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும். சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய-தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. அவற்றுள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள் மற்றும் ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் ஆகிய குறியீட்டின் கீழ் ஒரு முக்கியமான நிகழ்வு அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள், ஊடக உரிமையாளர்களின் பன்முகத்தன்மை மற்றும் ஊடக தயாரிப்புகளின் தரம் ஆகியவற்றின் கூறுகளுக்கும் பொருந்தும்.**

**அட்டவணை 05 – 2022 டிசம்பர் : தொழில்சார் நிபுணத்துவம் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்களின் சேவை நிபந்தனைகள் / ஊடகத் தொழிலுக்கான அங்கீகாரம் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **லேக்ஹவுஸ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் 149 பேர் இராஜினாமா.**

அரசாங்கத்திற்குச் சொந்தமான லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பொருளாதார நெருக்கடி காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ ஓய்வூதிய முறையின் (VRS) கீழ் 149 ஊழியர்கள் சேவையிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்த முறையின் கீழ் எதிர்வரும் வருடத்தில் மேலும் 100 பேர் ஓய்வுபெற உள்ளதாக லேக்ஹவுஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மொத்தத்தில், இலங்கையில் ஊடக நிறுவனங்கள் இயங்குவதற்கு கடினமான சூழல் காணப்படுவதோடு, அச்சு ஊடகங்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆதாரம்: FMM-MFRM Desk

**அட்டவணை 6: ஊடக சுதந்திரம்: 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–நவம்பர் | | 2022 டிசம்பர் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 64 | | 07 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 100 | 25 | 05 |
| ஊடக சுயாதீனத்துவம் | 06 | | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 07 | | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 17 | 01 | 01 |
| **மொத்தம்** | **180** | **26** | **14** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

---

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25